IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.36/2022**

**நாள்– 30.08.2023**

**ராஜதுரை**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் கருத்தப்புலியூரில் இருந்து வருகிறேன். லோடு மேனாக பணிபுரிந்தேன். இப்போது நான் வேலைக்கு செல்வதில்லை. என்னுடைய வயது, வருமானம், வேலை ஆகியவற்றை காண்பிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 09.03.2019 ம் தேதி கடையம் ரோட்டில் இருந்து சத்திரம் ரோட்டிற்கு திரும்புவதற்கு நின்றுகொண்டிருந்த போது எதிர்புறம் வந்த டிப்பர் லாரி வேகமாக வந்து என் மீது மோதியது. நான் ஹீரோ கிளாமர் பைக் வைத்திருந்தேன். இந்த இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டினேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் அந்தோணி இருதயராஜ் என்பவர் வாகனத்தை ஓட்டியதாகக் கூறியிருக்கிறேன். அதேபோல் தான் மனுவிலும் கூறியிருக்கிறேன். நான் வாகனத்தை நிறுத்தி நின்றுகொண்டிருந்த போது இண்டிகேட்டரை ஆன் செய்யவில்லை. நான் வாகனத்தை அவசரமாகத் திருப்பும் போது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. டிப்பர் லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையில் ஓட்டுநர் சுரேஷ் என்று தான் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய மனுவில் 1 ம் எதிர்மனுதாரராக சுபாஷ் என்பவரைத்தான் தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். சுபாஷ் என்பவர் வாகனத்தை ஓட்டி வந்ததாகத் தான் மனுவைத் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையோ, என்னுடைய வாகனத்தின் பதிவு சான்றிதழையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிப்பர் லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையில் தகுதிச்சான்றிதழும், பெர்மிட்டும் இல்லை என்று

குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதே போல் டிப்பர் லாரி ஓட்டுவதற்கான முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு இடது தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அது தொடர்பான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். டிப்பர் லாரி ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமமோ, பேட்ஜ்ஜோ இல்லை என்றால் சரிதான். விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிறு காயங்கள் என்றும், சிகிச்சையினால் அவைகள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்துப் பதிவேட்டில் சிறிய காயங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு உள்ளது. நான் அதிக நஷ்ட ஈடு கோரி தாக்கல் செய்திருக்கும் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. டிப்பர் லாரி ஓட்டுநர் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தகுதிச் சான்றிதழ், பெர்மிட் ஆகியவை இல்லாமலும் வாகனத்தை ஓட்டியதால் காப்பீடு கழக விதிமுறைகளை மீறியுள்ளதால் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏதாவது நஷ்ட ஈடு கிடைக்கவேண்டுமென்றால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.08.30 16:54:56 +0530